# தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6

**ந.க.எண். 0006 / பிடி2 / இ1 / 2021, நாள். 21.01.2021**

**பொருள்** : 10-ம் மற்றும் 12-ம் வகுப்பு மாணவர்களின் ஆரம்ப கற்றல் நிலை மதிப்பீடு (Initial Learning Level Assessment) – EMIS இணையதளம் மூலம் நடத்துதல் - சார்பு.

**பார்வை** : மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின் கடித நாள். 20.01.2021

--------

COVID 19 பெருந்தொற்று காரணமாக பள்ளிகள் திறக்கப்படாமல் இருந்த நிலையில் 19.01.2021 அன்று முதல் 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு மாணவர்களுக்கான வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. பள்ளிகள் திறக்கப்படாமல் இருந்த நிலையிலும் மாணவர்களின் கற்றல் அடைவு பாதிக்காத வண்ணம் பள்ளிக் கல்வித் துறை பல முன்முயற்சிகளை மேற்கொண்டது. அரசு வழங்கிய விலையில்லா மடிக்கணினிகளில் காணொலிகள் பதிவேற்றம், கல்வித் தொலைக்காட்சி மற்றும் சில தனியார் தொலைக்காட்சிகளில் பாடம் சார்ந்த காணொலிகள் ஒளிபரப்பு செய்தல், விரைவு குறியீடுகளுடன் கூடிய பாடப்புத்தங்களை உரிய நேரத்தில் வழங்குதல் போன்ற முன்னெடுப்புகளின் மூலம் மாணவர்களின் கற்றல் அடைவுக்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

தற்போது 10-ம் வகுப்பு மற்றும் 12-ம் வகுப்பு மாணவர்களுக்கு வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், மாணவர்கள் இது வரை எந்த அளவுக்கு அடைவுத்திறன் பெற்றுள்ளார்கள் என்று அறிந்துகொண்டு, அதன் அடிப்படையில் மாணவர்கள் பயன்பெறும் வகையில் அவர்களுக்கு எந்தெந்தப் பகுதிகளில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என்று ஆசிரியர்கள் திட்டமிடும் பொருட்டு ஆரம்ப கற்றல்நிலை மதிப்பீடு மேற்கொள்ள மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறவனத்தால் திட்டமிடப்பட்டுள்ளது. இம்மதிப்பீடானது 22.01.2021 முதல் EMIS மூலமாக பள்ளிகளில் உள்ள Hi-Tech Lab யை பயன்படுத்தி

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி இயக்ககம் மூலமாக நடத்தப்படவுள்ளது. மதிப்பீடு செய்வது சார்ந்து மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் வழங்கியுள்ள வழிகாட்டு வெறிமுறைகள் இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்படுகிறது. முதன்மைக் கல்வி அலுவலர்கள் இது சார்ந்து தனிக்கவனத்துடன் செயல்பட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

பள்ளிக் கல்வி இயக்குநர்

21/1/21

**பெறுநர்**

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

**நகல்**

1. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித்துறை அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
2. பள்ளிக் கல்வித் துறை ஆணையர் அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
3. மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்களுக்கு பணிந்தனுப்பப்படுகிறது.
4. இயக்குநர், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் கனிவுடன் அனுப்பப்படுகிறது.

## மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

**மதிப்பீட்டின் போது பள்ளிகள் கடைபிடிக்க வேண்டிய நெறிமுறைகள்**

- அனைத்து பள்ளிகளிலும் Hi-Tech Lab யில் உள்ள கணினிகள், Mouse, UPS, Server, மின் இணைப்பு அனைத்தும் முறையாக இயங்கும் விதத்தில் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- EMIS இணையதளத்தில் 10 ஆம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களின் பெயர், வகுப்பு, பாடப்பிரிவு ஆகியவை சரியாக உள்ளதா என்பதை சரிபார்க்க வேண்டும்.
- மதிப்பீடு நடைபெறுவதற்கு முன் பள்ளிவளாகம் வகுப்பறை ஆகியவை கிருமி நாசினி பயன்படுத்தி சுத்தம் செய்யப்படுவதோடு Hi-tech lab தினசரி காலை மாலை இரு வேளையும் சுத்தம் செய்யப்பட வேண்டும்.
- தினசரி மூன்று Batches மதிப்பீடு நடைபெறவுள்ள நிலையில், ஒரு batch முடிந்த பின் இருக்கை மற்றும் மாணவர்கள் பயன்படுத்திய மற்ற பொருட்கள் sanitizer கொண்டு சுத்தம் செய்யப்பட வேண்டும்.
- மதிப்பீடு நடைபெறும் போது Hi-Tech Lab யின் கதவு மற்றும் ஜன்னல்கள் திறந்து வைக்கப்பட்டு இருக்க வேண்டும்.
- மாணவர்கள் மதிப்பீடு தொடங்குவதற்கு முன்பும் மதிப்பீடு முடிந்த பின்னரும் sanitizer பயன்படுத்தி கைகளை சுத்தம் செய்ய வேண்டும்.
- மதிப்பீடு நடைபெறும் போது மாணவர்கள் முககவசம் அணிந்திருப்பதை உறுதி செய்வதோடு, சமூக இடைவெளியையும் முறையாக பின்பற்றுவதை கண்காணிக்க வேண்டும்.
- மதிப்பீடு நடைபெறும் போது Hi-Tech Lab யில் இரண்டு ஆசிரியர்கள் மாணவர்களை மேற்பார்வை செய்ய வேண்டும்.

முதல் கட்டமாக 12-ம் வகுப்பு மாணவர்களுக்கு பாடத்தொகுதி வாரியாக மதிப்பீடு நடத்தப்படவுள்ளது. ஒவ்வொரு நாளும் ஒரு நாளுக்கு 3 batches வீதம் 4 நாட்களுக்கு நடைபெறும், ஒரு batch கால அளவு 150 நிமிடங்கள் ஆகும்.

**Batches விவரம்**

| S. No | Batch No | Timing |
|---|---|---|
| 1 | I | 9:00 – 11:30 |
| 2 | II | 11:45 – 02:15 |
| 3 | III | 2:30 – 5:00 |

கேள்விகளைப் பொறுத்தவரை முதன்மைப் பாடங்கள் நான்கிலிருந்து ஒரு பாடத்திற்கு 30 கேள்விகள் கேட்கப்படும். உதாரணமாக இயற்பியல், வேதியியல், கணிதவியல், உயிரியல் பாடத் தொகுதியை எடுத்துக்கொண்டால் கீழ்க்கண்டவாறு கேள்விகள் கேட்கப்படும்.

| | | |
|---|---|---|
| இயற்பியல் | - | 30 |
| வேதியியல் | - | 30 |
| கணிதவியல் | - | 30 |
| உயிரியியல் | - | 30 |
| **மொத்தம்** | | 120 |

கேள்விகள் அனைத்தும் Multiple Choice Questions முறையில் இருக்கும்.

இதேபோல் தொழில்கல்விப் பிரிவுகளைப் பொறுத்தவரை செய்முறைப்பாடம் நீங்கலாக மீதம் உள்ள முதன்மைப் பாடங்கள் 3-ல் இருந்தும் ஒரு பாடத்திற்கு 30 கேள்விகள் வீதம் 3 பாடத்திற்கும் சேர்த்து 90 கேள்விகள் கேட்கப்படும். கால அளவு 150 நிமிடங்கள் ஆகும்.

**உதாரணமாக**

| | | |
|---|---|---|
| Basic Automobile Eng. Theory | - | 30 |
| Maths | - | 30 |
| Computer Technology | - | 30 |
| **மொத்தம்** | | **90** |

கற்றல் நிலை மதிப்பீடு 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பாடப்பிரிவு வரிசையில் நடத்தப்பட வேண்டும்.

உதாரணமாக வ.எண். 1,5,8 ஆகிய பாடப்பிரிவுகளில் ஒரு பள்ளியில், ஒரு பாடப்பிரிவிற்கு 20 மாணவர்கள் இருந்தால் அவர்கள் அனைவரும் 1,5,8 வரிசையில் உள்ள பாடப்பிரிவுகளை 3 batches -இல் ஒரு நாளில் முடித்துவிடலாம். அதாவது

முதலில் வரிசை எண். 1 பாடப்பிரிவு மாணவர்கள் முதல் batch –இல் மதிப்பீடு செய்யப்படுவர்.

பின் வரிசை எண். 5 க்கான பாடப்பிரிவு மாணவர்கள் இரண்டாவது batch –இல் மதிப்பீடு செய்யப்படுவர்.

பின் வரிசை எண். 8 க்கான பாடப்பிரிவு மாணவர்கள் மூன்றாவது batch – இல் மதிப்பீடு செய்யப்படுவர்.

20 மாணவர்களுக்கு மேல் ஒரு பாடப்பிரிவில் மாணவர்கள் இருந்தால், மாணவர்கள் எண்ணிக்கை மற்றும் Hi-Tech Lab –இல் உள்ள கணினிகளுக்கேற்ப இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பாடத் தொகுதி வரிசைப்படி மாணவர்கள் மதிப்பீடு செய்யப்படுவர்.

உதாரணமாக வரிசை எண். 1 பாடப்பிரிவில் 30 மாணவர்களும், வரிசை எண். 3 பாடப்பிரிவில் 15 மாணவர்களும், வரிசை எண். 8 பாடப்பிரிவில் 10 மாணவர்களும் ஒரு பள்ளியில் இருந்தால் கீழ்க்கண்டவாறு மதிப்பீடு நடைபெறும்.

முதல் batch –இல் வரிசை எண். 1 பாடப்பிரிவில் உள்ள 20 மாணவர்கள் மதிப்பீடு செய்யப்படுவர்.

இரண்டாவது batch – இல் வரிசை எண். 1 பாடப்பிரிவில் மீதமுள்ள 10 மாணவர்களும் வரிசை எண். 3 பாடப்பிரிவில் 10 மாணவர்களும் மதிப்பீடு செய்யப்படுவர்.

மூன்றாவது batch – இல் வரிசை எண். 3 பாடப்பிரிவில் மீதமுள்ள 5 மாணவர்களும் வரிசை எண். 8 பாடப்பிரிவில் உள்ள 10 மாணவர்களும் மதிப்பீடு செய்யப்படுவர்.

மதிப்பீடு நடைபெறும் நாளில் பள்ளிக்கு வருகை தராதவர்களுக்கு பள்ளியில் உள்ள அனைத்துப் பாடப்பிரிவுகளும் ஒரு சுற்று முடித்த பின்னர் இரண்டாம் சுற்றில் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பாடத்தொகுதி வரிசைப்படி மதிப்பீடு செய்யப்படும்.

2-ம் கட்டமாக 10-ம் வகுப்பு மாணவர்களுக்கு 5 பாடங்களையும் சேர்த்து மொத்தம் 100 கேள்விகள் கேட்கப்பட்டு 150 நிமிடங்கள் மதிப்பீடு நடைபெறும். 10-ம் வகுப்பிற்கான மதிப்பீடானது நாளொன்றுக்கு 3 Batches வீதம் 2 நாட்களுக்கு நடைபெறும்.

## Annexure

| | | |
|---|---|---|
| 1. | 2503 | Maths, Physics, Chemistry & Biology |
| 2. | 2702 | Commerce, Accountancy, Economics & Computer Application |
| 3. | 2608 | Physics, Chemistry, Botany & Zoology |
| 4. | 2502 | Maths, Physics, Chemistry & Computer Science |
| 5. | 2704 | Commerce, Accountancy, Economics & History |
| 6. | 2601 | Physics, Chemistry, Biology & Computer Science |
| 7. | 2951 | Biology, Agricultural Science (Theory), Computer Technology, Agricultural Science Practical. |
| 8. | 2962 | Commerce, Accountancy, Computer Application, Auditing Practical |
| 9. | 2708 | Commerce, Accountancy, Economics & Business Maths |
| 10. | 2701 | Commerce, Accountancy, Economics and Statistics |
| 11. | 2802 | Economics, History, Geography and Computer Application |
| 12. | 2804 | Economics, History, Geography and Political Science |
| 13. | 2604 | Physics, Chemistry, Biology and Nursing |
| 14. | 2922 | Mathematics, Basic Electrical Engineering Theory, Computer Technology, Basic Electrical Engineering Practical. |
| 15. | 2961 | Com, Acc, Office Management and Secretaryship Theory, Typography and Computer Application Practical. |
| 16. | 2921 | Mathematics, Basic Mechanical Engineering Theory, Computer Technology, Basic Mechanical Engineering Practical. |
| 17. | 2806 | Economics, History, Geography and Ethics and Advanced Tamil |
| 18. | 2941 | Textiles & Dress Designing |
| 19. | 2602 | Physics, Chemistry, Biology and Microbiology |
| 20. | 2607 | Physics, Chemistry, Biology and Home Science |
| 21. | 2923 | Basic Electronics Engineering |
| 22. | 2605 | Physics, Chemistry, Biology and Nutrition & Dietetics |
| 23. | 2805 | Economics, History, Geography and Ethics & Indian culture |

| | | |
|---|---|---|
| 24. | 2705 | Commerce, Accountancy, Economics and Political Science |
| 25. | 2931 | Nursing |
| 26. | 2707 | Commerce, Accountancy, Economics and Advanced Tamil |
| 27. | 2603 | Physics, Chemistry, Biology and Biochemistry |
| 28. | 2942 | Food Service and Management |
| 29. | 2801 | Economics, History, Statistics and Geography |
| 30. | 2924 | Mathematics, basic Civil Engineering Theory, Computer Technology, Basic Civil Engineering Practical. |
| 31. | 2926 | Mathematics, Textile Technology Theory, Computer Technology, Textile Technology Practical. |
| 32. | 2504 | Physics, Chemistry, Maths and Biochemistry |
| 33. | 2706 | Commerce, Accountancy, Economics and Ethics &Indian culture |
| 34. | 2803 | Economics, History, Geography and Communicative English |
| 35. | 2925 | Mathematics, Basic Automobile Engineering Theory, Computer Technology, Basic Automobile Engineering Practical. |
| 36. | 2606 | Physics, Chemistry, Biology and Communicative English |
| 37. | 2506 | Physics, Chemistry, Maths and Home Science |
| 38. | 2703 | Commerce, Accountancy, Economics and Communicative English |
| 39. | 2505 | Physics, Chemistry, Maths and Communicative English |
| 40. | 2501 | Physics, Chemistry, Maths and Statistics |